Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம் வருஷம் செப்டெம்பர் மீ 19௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 27

## ஜெர்மனிக்கு ரூஸ்வெல்ட் எச்சரிக்கை.

### "அட்லாண்டிக் கடலில் சங்கிலி விரியன் பாம்புகள்"!

### அமெரிக்கக் கடற்படை, கண்ட இடத்தில் சுடும்.

### ஜெர்மனியின் ஓலமும், ஜப்பானின் தந்திரமும்.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், அட்லாண்டிக் கடல் யுத்த சம்பந்தமாக ஜெர்மனிக்கு ஒரு எச்சரிக்கை செய்திருக்கிறார். அமெரிக்கத் தரைப்படை, அமெரிக்கக் கப்பற்படை, இவைகளின் பிரதம தளகர்த்தர் என்ற முறையில் அவர் ஒரு புதிய கொள்கையை வகுத்திருக்கிறார். அக்கொள்கையாவது :—

அமெரிக்காவினுடைய பாதுகாப்புக்கு அவசியம் என்று கருதப்படும் கடற் பிரதேசங்களில், அச்சு நாடுகளின் சப்மரீன்களாவது, இதர யுத்தக் கப்பல்களாவது வெளியில் தெரிகிற வரைக்கும், அமெரிக்கக் கப்பல்களும், அமெரிக்க விமானங்களும், இனிமேல் காத்துக்கொண்டிருக்கமாட்டா. அமெரிக்கக் கொள்கையாகிய கடல் சுதந்தரத்தைப் பாதுகாப்பது அமெரிக்கக் கடல் விமானப் படையின் கடமை. அதாவது, பாதுகாப்புக் கடற் பிரதேசத்தில் வியாபார சம்பந்தமாகச் செல்லும் அமெரிக்கக் கப்பல்களையும், இதர தேசக் கப்பல்களையும், ஜாக்கிரதையாகக் காப்பாற்றும் வேலையை அமெரிக்க விமானங்கள் செய்யும்.

அதாவது, அமெரிக்கக் கடற் பாதுகாப்புப் பிரதேசத்தில், காணப்படும் அச்சு நாட்டு விமானங்களும், சப்மரீன்களும், யுத்தக் கப்பல்களும், உடனே தாக்கப்படும். ஏன் இந்த முக்கிய மான முடிவுக்கு பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் வந்தார்? அதன் காரணங்களை தன்னுடைய ரேடியோ பிரசங்கத்தில் அவர் கூறியிருக்கிறார். அவையாவன :—

(1) சில மாதங்களுக்கு முன் "ராபின்மூர்" என்ற அமெரிக்க வர்த்தகக் கப்பல், தெற்கு அட்லாண்டிக் கடல் மத்தியில், ஒரு ஜெர்மன் சப்மரீனால் முழுகடிக்கப்பட்டது. கப்பலிலிருந்த பிரயாணிகளும், கப்பலோட்டிகளும் நிலத்துக்கு நூற்றுக் கணக்கான மைல்களுக்கப்பால், படகுகளில் செல்லும்படி கட்டாயப்படுத்தப் பட்டார்கள். இது, ஜெர்மனியும் இதர நாடுகளும் கையெழுத்திட்ட அகில தேசீய ஒப்பந்தத்துக்கு விரோதமான காரியம். இதற்கு, ஜெர்மானிய அரசாங்கம் மன்னிப்புக் கேட்கவில்லை; தவறு செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லை; நஷ்ட ஈடு கொடுப்பதாகக் கூறவும் இல்லை.

#### "செஸ்ஸா"வின் கதி.

(2) 1941-ம் வருஷம் ஜுலை மீ, ஒரு அமெரிக்க யுத்தக் கப்பலைத் தொடர்ந்து ஒரு ஜெர்மன் சப்மரீன் சென்று, அதைத் தாக்குவதற்குச் சரியான இடம் பார்த்துக்கொண்டிருந்தது. அம்மாதிரி செய்வதற்கு யாதொரு காரணமும் இல்லை. அந்த இடத்திலிருந்து நூற்றுக் கணக்கான மைல் சுற்றளவில், பிரிட்டிஷ் சப்மரீனாவது, அமெரிக்க சப்மரீனாவது ஒன்று கூட இல்லை.

(3) ஆகஸ்ட்டு மீ 17-ந் தேதி, "செஸ்ஸா" என்ற அமெரிக்கக் கப்பல், ஒரு ஜெர்மன் சப்மரீனால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது. கப்பலோட்டிகள் அனைவரும் முழுகி இறந்தார்கள். அக்கப்பல் ஐஸ்லாந்தில் ராணுவ சம்பந்த மில்லாத மக்களுக்கு சாமான்கள் கொண்டு போய்க்கொண்டிருந்தது.

(4) செப்டெம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் "ஸ்டில் சீபோர்" என்ற அமெரிக்கக் கப்பல் மேல் ஒரு ஜெர்மன் விமானம் வெடி குண்டுகள் போட்டு, அதை முழுகடித்தது. இது செங்கடலில், சூயஸ் கால்வாய்க்கு 230 மைல் தூரத்தில் நடந்த சம்பவம்.

(5) செப்டெம்பர் மீ 4-ந் தேதி, அமெரிக்க நாசகாரிக் கப்பல் "கிரீயர்", கிரீன்லாந்துக்குத் தெற்கில், பட்டப்பகலில், ஒரு ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பலால் தாக்கப்பட்டது. முயற்சியில் வெற்றியடையவில்லை. அமெரிக்கக் கொடியைப் பறக்க விட்டுக்கொண்டு, இந்த அமெரிக்கக் கப்பல், அமெரிக்காவிலிருந்து ஐஸ்லாந்துக்குத் தபால் கொண்டு போய்க்கொண்டிருந்தது.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் பிரசங்கத்தின் பிறகு, மேலும் இரண்டு சம்பவங்கள் நடந்தன. அவை யாவன :—

(6) அகில அமெரிக்க கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டு சென்ற "மோந்தோனா" என்ற கப்பல் நீர்க்குண்டுகளால் தாக்கப்பட்டு, செப்டம்பர் மீ 11௳ முழுகடிக்கப்பட்டது.

(7) அதே தேதியில், சூயஸ் பட்டணத்தின் மேல் நடத்தப்பட்ட ஜெர்மன் விமானத்தாக்குதலால், "அர்கான்சா" என்ற அமெரிக்கக் கப்பல், பழுதாக்கப்பட்டது. கப்பலின்மேல் அமெரிக்கக் கொடி பறந்து கொண்டிருந்தது.

#### ஜெர்மனியின் திட்டம்.

ஜெர்மனிதான் இந்த ஏழு அமெரிக்கக் கப்பல்களைத் தாக்கினதற்குக் காரணம். இந்த சம்பவங்கள் தனிப்பட்ட சம்பவங்களல்ல. கடல் சுதந்தரத்தை அழிப்பதற்காக, ஜெர்மனியின் பொதுத்திட்டத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான சம்பவங்களாகும். ஜெர்மனி, கடலில் ஆதிக்கம் பெற்றால், அமெரிக்காவையும், மேற்குக் கோளத்தையும், கைப்பற்றுவதற்கு சுலபமாயிருக்கும்.

இதல்லாமல், மேற்குக் கோளத்தில் ஜெர்மனி பலவிதமான சூழ்ச்சிகளைச் செய்துகொண்டு வந்திருக்கிறது. ஹிட்லருடைய ஐந்தாம் படையும், அதனால் ஏமாற்றப்பட்ட அமெரிக்கர்களும் இதற்கு உதவி செய்திருக்கிறார்கள். சென்ற வருஷம், தென் அமெரிக்காவில், உருகுவேயின் அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட ஒரு ஜெர்மன் சதியாலோசனை நடந்தது. ஆனால் அது உடைக்கப்பட்டது. அர்ஜெண்டைனாவில், அரசாங்கம் முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகளைச் செய்து, ஜெர்மன் சூழ்ச்சியை அழித்துவிட்டது. பொலிவியாவிலும் அந்த மாதிரி நடந்தது. கொலம்பியாவில், பனாமா கால்வாய்க்கருகில் சில ரகசிய விமான மிறங்கும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அமெரிக்காவின் செய்கைக்கு மூன்று காரணங்களுண்டு :—

(1) முதலாவது காரணத்தை பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் விளக்கமாகக் கூறியிருக்கிறார். அமெரிக்காவைப் பாதுகாக்கவேண்டுமானால் பிரிட்டிஷ் கடற்படை அவசியம் வேண்டியிருக்கிறது. அது அழிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டால்தான், அமெரிக்கக் கப்பற்படை தோற்கடிக்கப்படாமல் இருக்கும்.

(2) கடல் சுதந்திரம் மிகவும் முக்கியமானது என்று அமெரிக்கா கருதுகிறது.

(3) ஹிட்லருடைய விரோதிகளுக்கு சாமான் அனுப்பப்படும் வேலை தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். இதனால் என்ன செலவு நேர்ந்தாலும் சரி, என்ன அபாயம் வந்தாலும் சரி, வர்த்தக வழியை நாம் திறந்தே வைத்திருப்போம் என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறியிருக்கிறார். மேலும் அவர் கூறியதாவது :—ஒரு சங்கிலிவிரியன் பாம்பு நம்மைக் கடிக்க வருமானால், அது கடிக்கும் வரை நாம் காத்திருப்பதில்லை. நாம் உடனே அதை

அடித்துக் கொல்கிறோம். ஜெர்மானியர்களுடைய நீர் முழுகிக் கப்பல்களும், போர்க் கப்பல்களும், அட்லாண்டிக் கடலின் சங்கிலிவிரியன் பாம்புகள். விசாலமான கடல்களில் சுதந்தர வழிகளுக்கு அவை ஒரு பெரும் அபாயமாயிருக்கின்றன. அமெரிக்காவின் சுதந்தரத்தை அழிக்க முயற்சிக்கும் அவைகளை ஒழிப்பது நமது கடனாகும்.

### புதிய சமுதாய ஏற்பாடு.

ஜெர்மானியர்கள் உலக முழுவதும் புதிய சமுதாய ஏற்பாட்டை ஏற்படுத்துவதாகச் சொல்லுவதைப் பற்றி, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார்.

அவர் கூறியதாவது :—ஜெர்மனியின் புதிய திட்டம், பலாத்காரம், கொரூரம், கொலை இவைகளின் மேல் ஏற்படுத்தப்பட்டது. சட்டம், சுதந்தரம், ஒழுக்கம், மதம் இவைகளுக்கெல்லாம் எதிரிடையாக உள்ளவர்கள் ஜெர்மானியர்கள். இவர்கள் நம்முடைய பாதுகாப்பையும் தாக்கியிருக்கிறார்கள். இனிமேல் அவர்கள் தலைவிரித்தாடுவதை அடக்க வேண்டியகாலம் வந்துவிட்டது. ஆனால் ஜெர்மனியே அமெரிக்காவை யுத்தத்தில் இழுக்கிற வரைக்கும் போர் தொடங்காது. அமெரிக்காவைப் பாதுகாக்கும் விஷயத்தில், இந்த நிலைமை வராமல் தடுக்கமுடியாது.

தம்முடைய பிரசங்கத்தில், ''கடற்பாதுகாப்புப் பிரதேசம்'' என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறியிருக்கிறார். அப்படி என்றால் என்ன? அமெரிக்காவின் துறைமுகங்களிலிருந்து, ஐஸ்லாந்து பிரதேசம் வரைக்கும் ''பாதுகாப்புப் பிரதேச''மாகக் கருதப்படும். இதல்லாமல், எங்கெல்லாம் அமெரிக்கக் கடற்படைத் தளங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ, அவைகளைச் சுற்றி உள்ள பிரதேசங்கள் ''பாதுகாப்புப் பிரதேசங்களாக''க்கொள்ளப்படும்.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்டின் பிரசங்கத்தைப்பற்றி ஜெர்மனி என்ன நினைக்கிறது? நடுநிலைமைச் சட்டத்தை உடைப்பதற்கு பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் முயற்சி செய்வதாகவும், ஜெர்மனியின்மேல் அவர் எல்லா பழியையும் போடுவதாகவும், ஜெர்மனி ஓலமிடுகிறது. அமெரிக்காவை யுத்தத்தில் இழுத்து விடுவதற்கு அவர் பிரயத்தனப்படுவதாகவும், ஜூலை மாத மத்தியிலேயே தாக்கும்படி அவர் உத்தரவிட்டதாகவும், ஜெர்மனி கூறுகிறது.

### பாதுகாப்புப் பிரதேசங்கள்.

''பாதுகாப்புப் பிரதேசங்கள்'' எவை என்பதை அமெரிக்க அரசாங்கம் அதிக ஜாக்கிரதையுடன் சொல்லாமல் விட்டுவிட்டது என்று இத்தாலிய பத்திரிகையின் ஆசிரியர் சீனர் கெய்டா கூறுகிறார்.

ஜெர்மனி இனிமேல் என்ன செய்யப்போகிறது என்பது விளக்கமாகத் தெரியவில்லை. இரண்டுவித நிலைமைகளின் மத்தியில் ஜெர்மனி அகப்பட்டுக் கொண்டு இருக்கிறது. அமெரிக்கக் கப்பல்களைத் தாக்காவிட்டால், ஜெர்மனி அட்லாண்டிக் யுத்தத்தை இழந்துவிடும்படி நேரிடும். அமெரிக்கக் கப்பல்களைத் தாக்கினால் அமெரிக்காவை ஜெர்மனி யுத்தத்தில் தானே இழுத்துவிடும். ஆனால் ஜெர்மனி என்ன செய்யும் என்று நிச்சயமாக யாராலும் சொல்ல முடியாது. பசிபிக் கடலில் ஜப்பான் யுத்தம் ஆரம்பிக்கும் வரையில், ஜெர்மனி ஒன்றும் செய்யாது என்று கூறப்படுகிறது. ஆனால் ஜப்பான் அப்படிச் செய்யுமா? மூன்று வல்லரசுகளின் (ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்) உடன்படிக்கையின்படி, ஜப்பான் ஜெர்மனிக்கு உதவி செய்யவேண்டுமென்ற அவசியமில்லை. ஏனென்றால், அமெரிக்கா ஜெர்மனியைத் தாக்கவில்லை. தாக்காதவரைக்கும் அமெரிக்காவின் மேல் ஜப்பான் போர் தொடுக்கவேண்டிய அவசியமில்லை.

இதல்லாமல், கிழக்குப் போர்முனையில் என்ன நடக்கின்றது என்பதைப் பொறுத்து ஜப்பானுடைய தந்திரப்போக்கு இருக்கும். ரஷ்யா ஒருக்கால் ஜெயிக்காவிட்டால், ஜப்பான் தன்னுடைய சுயரூபத்தைக் காட்டலாம். ஆனால் அப்படிப்பட்ட சம்பவம் நேரப்போவதாக இப்போதுள்ள நிலைமை காட்டவில்லை.

அமெரிக்காவில், யுத்தத்தில் கலக்கக்கூடாது என்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் பிரசங்கத்தை ஆதரிக்கவில்லை, ஆனால் மிஸ்டர் வெண்டல் வில்கி அதை ஆதரித்திருக்கிறார். அமெரிக்கப் பத்திரிகைகளும் ஆதரிக்கின்றன. ஹிட்லரை அறைகூவி அழைத்த பிரசங்கம் என்ற அபிப்பிராயம் பிரிட்டனிலும், குடியேற்ற நாடுகளிலும் இருந்துவருகிறது. ''ஒரு பெரிய தேசத்தின் சார்பாக, ஒரு பெரிய மனிதர் செய்த ஒரு பெரிய பிரசங்கம்'' என்று ஆஸ்திரேலியத் தொழிலாளர் தலைவர், மிஸ்டர் கர்டிஸ், கூறுகிறார்.

### பிரிட்டனுக்கு அனுகூலம்.

நடுநிலைமைக்கும், யுத்தத்தில் ஈடுபடுவதற்கும் உள்ள வித்தியாசம், அமெரிக்காவைப் பொறுத்த வரையில், மறைந்துவிட்டது என்று சொல்லலாம். முன்பு கேட்ட அமெரிக்கத்துணை உதவிக் கப்பல் சகாயத்தை ('கான்வாயை') விட அதிகப்படியாக அமெரிக்கா போயிருக்கிறது. இது பிரிட்டிஷ் கடற்படைக்கு ஒரு பெரிய லாபம். கப்பலில் வரும் யுத்த சாமான் பாதுகாப்பு வேலையை, மேற்கு அட்லாண்டிக் கடலைப் பொறுத்தவரையில், அமெரிக்கா பார்த்துக்கொள்ளும் கிழக்கு அட்லாண்டிக் கடலில், 'சப்ளை' கப்பல்கள் பாதுகாப்பு வேலையை மாத்திரம் பிரிட்டிஷ் கடற்படை செய்வதற்கு இப்போது அனுகூலம் ஏற்பட்டிருக்கிறது.

### வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டன.

தன்னுடைய பிரசங்கத்தில் செய்த வாக்குறுதிகளை, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சீக்கிரமாக நிறைவேற்றியிருக்கிறார். அமெரிக்கக் கப்பற்படைக்கு உடனே ஒரு மிக முக்கியமான உத்தரவிடப்பட்டது. சென்ற செவ்வாய்க்கிழமையிலிருந்து, அதாவது செப்டெம்பர்மீ 16உயிலிருந்து, அமெரிக்கா கண்டத்திலிருந்து, ஐஸ்லாந்துக்குச் சாமான்கள் கொண்டு செல்லும் கப்பல்களைப் பாதுகாக்கவேண்டும் என்பதுதான் அந்த உத்தரவு. எந்த அச்சு நாட்டுக்கப்பல் அந்த வழியில் அகப்பட்டாலும், அது நீர்முழுகிக் கப்பலாயிருந்தாலும்சரி, அல்லது நீர்மேல் இருக்கும் போர்க்கப்பலாயிருந்தாலும்சரி, அதை உடனே கைப்பற்றவேண்டும் அல்லது நாசமாக்கவேண்டும் என்று அமெரிக்கக் கப்பற்படைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவிலிருந்து பிரிட்டிஷ் துறைமுகங்களுக்குப் போகும் வழியில் எந்தக்கப்பல் அகப்பட்டாலும் அது முழுகடிக்கப்படும் என்பது ஹிட்லரின் பயமுறுத்தல். அதற்குச் சரியான பதிலை அமெரிக்கா அளித்திருக்கிறது. ஹிட்லருடைய சவாலை அமெரிக்கா ஒப்புக்கொண்டு, ஜெர்மன் கப்பல்களை முழுகடிப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறது. ஹிட்லருடைய நிலைமை இப்போது சங்கடமாயிருக்கிறது. பிரிட்டனுக்கு அமெரிக்காவிலிருந்து யுத்த சாமான் கொண்டுபோவதைத் தடுக்காவிட்டால் பிரிட்டனைத் தோற்கடிக்க முடியாது. ஆகையால் சாமான் கொண்டுபோகும் கப்பல்களை முழுகடிக்கவேண்டும். ஆனால் அப்படிச் செய்தால், அமெரிக்கக் கப்பற்படையுடன் நேர்முகமாகச் சண்டை செய்யவேண்டும். ஜெர்மனிக்கு இப்போதிருக்கும் எதிரிகளுடைய கணக்கில் இன்னொன்று அதிகமாகிறது.

அமெரிக்கா சீக்கிரத்தில் யுத்தத்தில் ஈடுபடும்படியான நிலைமை ஏற்படும் என்று அமெரிக்கக் கடற்படை உதவி காரியதரிசி கூறுகிறார். அமெரிக்கக் கப்பல்கள் அட்லாண்டிக் கடலில் யுத்த முஸ்தீப்புடன் இருக்கின்றன. 'கான்வாய்' என்ற துணை பாதுகாப்புக்காக, 125 அமெரிக்கக் கப்பல்களுக்குமேல் தயாராய் இருக்கின்றன.

# கத்திகள் கலப்பை முனையாக்கப்படுமா?

## பின்லாந்து—ரஷ்யா சமாதானப் பேச்சு.

## இழந்த பிரதேசங்களைப் பெற்ற பிறகு சண்டை எதற்கு?

பின்லாந்து என்பது போலந்துக்கும், பால்டிக் நாடுகளுக்கும் வடக்கே உள்ள நாடு. ரஷ்யா, அதற்குக் கிழக்கிலும் தென் கிழக்கிலும் உள்ள பெரிய நாடு. பின்லாந்துக்கு நேர் மேற்கில் இருப்பது ஸ்வீடன். பின்லாந்து எதிரிகள் கையில் இருந்தால் ரஷ்யாவுக்கு ஒரு பெரிய அபாயம். லெனின்

கிராட் என்ற ரஷ்யாவின் முக்கியப் பட்டணம் பின்லாந்துக்கு அருகில் இருக்கிறது. ஆகையால் யுத்தம் ஆரம்பித்த உடனே, ரஷ்யா பின்லாந்தின் மேல் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தது. 1939-ம் வருஷ நவம்பர்மீ 30உ ரஷ்யா, பின்லாந்தின்மேல் படையெடுத்தது. பிறகு, தனக்கு ஆதரவளிக்கும் அரசாங்கத்தைப் பின்லாந்தில் ஏற்படுத்திற்று. பின்லாந்தில் சில முக்கியமான இடங்களைக் கைப்பற்றி, மானர்ஹீம்லேன் என்ற பின்லாந்தின் பாதுகாப்பு ஏற்பாட்டைக் கடந்து 1940-ம் வருஷ பிப்ரவரிமீ 15உ சென்றது. மார்ச்சுமீ 12உ ரஷியாவுக்கும் பின்லாந்துக்கும் சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

இந்த வருஷம் 1941-ம் வருஷ ஜூன்மீ 22உ, ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கியது. பின்லாந்து மூலமாக ஜூன்மீ 30உ எதிர்த்தபோது ரஷ்யர்கள், ஜெர்மானியர்களைப் பின்வாங்கிச் செல்லும்படி தாக்கினார்கள். பின்லாந்து படைகளும் ஜெர்மனியுடன் இப்போது ரஷ்யாவில் போர்புரிந்து வருகின்றன.

பின்லாந்தினுடைய நோக்கம், ரஷ்யாவால் தன்னிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை திரும்பி அடைவது தான் என்று பல தடவை கூறப்பட்டது. இப்போது 1939-ம் வருஷத்திய எல்லைவரைக்கும் உள்ள பிரதேசங்களை பின்லாந்து மீண்டும் அடைந்திருக்கிறது. பின்லாந்தின் போர்முனையில் இருந்த ரஷ்யத் துருப்புகள் பின்லாந்து படைகளுடன் சண்டையிடுவதை நிறுத்தி, பின்லாந்தின் பழைய எல்லையைத் தாண்டி கரீலியா பூசந்திக்குச் சென்றுவிட்டன. இதைக்கண்டு, பின்லாந்தின் பிரதம தளகர்த்தர், மார்ஷல் மானர் ஹீம், தம்முடைய துருப்புகளை வேறு யுத்த முனைகளுக்கு அனுப்பிவிட்டார். இன்னும் பின்னிஷ் சிப்பாய்களின் கத்திகளை கலப்பை நுனியாக மாற்றவேண்டிய காலம் வரவில்லை என்று அவர் கூறினாலும், லெனின் கிராட் பகுதியில் நடக்கும் ஜெர்மன் யுத்தத்தில் அசிரத்தை காட்டுவதாகத் தெரிகிறது.

### பத்திரிகைச் செய்திகள்.

இது சமாதானத்துக்கு அறிகுறியா, அல்லது கரீலியாவைக் கைப்பற்றும் நோக்கத்துடன் செய்ததா, என்ற விஷயம் இப்போது விளக்கமாகத் தெரியவில்லை. பின்லாந்து மக்கள் விஷயமாக ரஷ்யா நடந்துகொண்டதைப்பற்றிக் குறைகூறி, பின்லாந்து அரசாங்கம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. "எங்களுடைய உரிமைகளைப் பெறுகிற வரைக்கும்தான் சண்டையிடுவோம். அதற்குப்பின் சண்டை செய்யமாட்டோம்" என்று பின்லாந்தின் வர்த்தக மந்திரியான மிஸ்டர் டானர் கூறி யிருக்கிறார். பின்லாந்திலிருந்து சமாதானப் பேச்சுகளைப் பற்றி செய்திகள் வெளிவந்துகொண்டிருப்பதை பின்லாந்து அரசாங்கம் தடுப்பதில்லை.

இப்போது ஜெர்மனிக்கும் பின்லாந்துக்கும் இருக்கும் மனத்தாங்கல் அதிகப்பட்டிருக்கிறது. சண்டையில் இழுத்து விட்டுவிட்டு, தன்னைத் தனியாகக் கஷ்டத்தில் விட்டுவிட்டதாக பின்லாந்து நினைக்கிறது. இதல்லாமல் பிரிட்டனும் அமெரிக்காவும் பின்லாந்துக்கு ஒரு விஷயம் கூறி யிருக்கிறார்கள். ரஷ்யாவிடமிருந்து தன்னுடைய பிரதேசங்களைத் திரும்பிப் பெற்றபிறகு, மறுபடியும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினால், அதற்கு பின்லாந்துதான் உத்தரவாதம் என்று அவர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

ஆகையால் பின்லாந்து, ரஷ்யாவுடன் சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறதென்பதில் உண்மையிருக்கவேண்டும். ஸ்வீடனிலும், அமெரிக்காவிலும் சமாதானப் பேச்சைப்பற்றி அடிக்கடி பிரஸ்தாபம் செய்யப்படுகிறது. பின்லாந்து—ரஷ்ய சமாதானத்துக்கு தனக்குள்ள ஆட்சேபனையை ஜெர்மனி விட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. ஜெர்மனி பின்லாந்துக்கு ஏராளமான தானியம் கொடுப்பதாக அறிவித்தது. பின்லாந்தின் பிரசிடெண்ட் மிஸ்டர் ரைடிக்கு, ஹிட்லர் வாழ்த்துச் செய்தி அனுப்பியதையும், மார்ஷல் மானர் ஹீமுக்கு இரும்புச் சிலுவைப் பதக்கச்சின்னம் அளித்ததையும், பின்லாந்து பத்திரிகைகள் குறிப்பிடாமல் விட்டுவிட்டன. ஜெர்மனி பின்லாந்தை நல்லதனம் செய்துகொள்ள முயற்சிக்கிறது. ஆனால் பின்லாந்து மக்கள் ரஷ்யாவுடன் இனிமேல் யுத்தம் செய்ய விரும்பவில்லை. ஆனால், பின்லாந்துக்கும் ரஷ்யாவுக்கும் சமாதான உடன்படிக்கை செய்வதற்கு அமெரிக்கா ஏற்பாடு செய்கிறதென்று "நியூயார்க் வொர்ல்டு டெலிகிராம்" கூறும் செய்தி எவ்வளவு தூரம் உண்மையென்பது பின்னால் தான் தெரியவரும்.

## இரானிய அரசரின் ராஜிநாமா.

### நேசதேசத்தார்கள் டெஹரானில் பிரவேசம்.

இரானின் அரசர், உடம்பு அசௌக்கியம் என்ற காரணத்தைச் சொல்லி, ராஜ்யத்தைக் கைவிட்டு விட்டு, தன்னுடைய மூத்த மகனை அரசராக நியமித்து, தலைநகரத்தை விட்டுப்போய்விட்டார். புதிய அரசர் 1939-ம் வருஷம் எகிப்திய அரசரின் மூத்த சகோதரியான அரசகுமாரி பாசியாவைக் கலியாணம் செய்துகொண்டார். பழைய இரானிய அரசரும், அவருடைய அரசாங்கமும் மாறுபட்ட கொள்கைகளைப் பின்பற்றி வந்தார்கள். அரசர் ஜெர்மனிக்கு அனுகூலமாகவும், மந்திரி சபை நேசதேசத்தார்களுக்கு அனுகூலமாகவும் இருந்து வந்தார்கள். இரானிய சட்டசபை மந்திரி சபையிடம் பூரண நம்பிக்கை காட்டியிருக்கிறது; பிரிட்டனுடனும், ரஷ்யாவுடனும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது அதன் அபிப்பிராயம். ஆனால், இது விஷயமாக இரானிய அரசர் யாதொரு சிரத்தையும் காட்டவில்லை. அச்சு நாடுகளின் ஸ்தானீக உத்தியோகஸ்தர்கள் இரானில் தாங்கள் இருந்த இடத்தில் இருக்க வேண்டுமென்பதும், அச்சு நாடுகளும் இரானும் நட்புடன் இருக்கவேண்டுமென்பதும் அவருடைய அபிப்பிராயம். "எட்டெலாத்" என்ற பத்திரிகையில் அவருடைய தூண்டுதலின்பேரில் இந்த அபிப்பிராயத்தைக்கொண்ட ஒரு கட்டுரை வெளிவந்ததாகத் தெரிகிறது. அப்பத்திரிகையை இரானிய அரசாங்கத்தார் நிறுத்திவிட்டார்கள்.

இரானில் உள்நாட்டு விஷயங்கள் சிறிது குழப்பத்தை உண்டாக்கின. இரானிய மக்கள் அரசியல் உரிமைகள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பழைய அரசருக்கு அது இஷ்டமில்லை. இந்த நிலைமையில், முன் ஜாக்கிரதையாக பிரிட்டிஷ் துருப்புகளும், ரஷ்யத் துருப்புகளும் இரானின் தலைநகரான டெஹரானில் பிரவேசித்தன. இரானில் கலகத்தை உண்டாக்கிக்கொண்டு திரியும் ஜெர்மனியர்களை விரட்டித் துரத்திவிடுவதுதான் நேசதேசத்தாரின் நெருங்கிய நோக்கம். இதல்லாமல், இரானிலிருக்கும் உணவுப் பொருள்களை வெளியில் அனுப்பிக்கொண்டிருந்த ஜெர்மானியர்களின் சூழ்ச்சியை கெடுப்பது, இரானில் உள்ள எண்ணெய்க் களஞ்சியங்களைப் பாதுகாப்பது, பாரசீகக் குடாக்கடலிலிருந்து காஸ்பியன் கடல் வரைக்கும் இருக்கும் போக்குவரவு சாதனங்களைக் காப்பது முதலியவை நேசதேசத்தார்களுடைய முக்கியமான நோக்கங்கள். போக்குவரவு சாதனங்களைக் பாதுகாப்பதால், அமெரிக்காவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் வரும் யுத்த சாமான்கள் ரஷ்யாவுக்குப் போவதற்கு சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது.

### இராக்குக்குச் சுதந்தரம்.

இரானில் நேச தேசத்தார்கள் நடந்துகொண்டதும், இராக்கில் பிரிட்டன் நடந்துகொண்டதும் கௌரவமும், பெருந்தன்மையும் பொருந்தியிருக்கின்றன. இராக் மக்களுக்கு பிரிட்டன் சுதந்தரமளிக்க வாக்குறுதி செய்தது. அதன்படி, நியாயமான அரசரை திரும்பி சிம்மாசனத்தில் உட்காரவைத்து, அரசாங்க அதிகாரம், நியாயம் வழங்குதல், கலகக்காரர்களைத் தண்டித்தல் முதலியவற்றை எல்லாம் நடத்த இராக்கிய மக்களுக்கே உரிமை கொடுத்திருக்கிறது. ஆனால் ஜெர்மனி பிரவேசித்த நாடுகளிலெல்லாம், மக்களுடைய உரிமைகளும், சுதந்தரங்களும் அழிக்கப்பட்டன. நாட்டிலுள்ள உணவுப் பொருள்கள் கையாளப்பட்டன.

# ரஷ்யாவில் கடுமையான யுத்தம்.
## லெனின்கிராடைப் பிடிக்க ஜெர்மானியர் முயற்சி.

ரஷ்யாவில், முர்மான்ஸிக்கிலிருந்து கருங்கடல் வரைக்கும், ஜெர்மனி தீவிரமான போர் மறுபடியும் ஆரம்பித்திருக்கிறது. தெற்கில் 200 மைல் நீண்ட போர் முனையில் ரஷ்யர்கள் ஜெர்மனியர்களை எதிர்த்துத் தாக்குகிறார்கள். ஆர்டிக் பிரதேசத்தில், பிரிட்டிஷ் விமானங்கள் சுறுசுறுப்பாய் வேலை செய்கின்றன; வடக்கில் ஜர்மனியத் துருப்புகள் வெளியிலிருந்து வந்து இறங்காமல் பார்த்துக்கொண்டிருக்கின்றன.

லெனின்கிராடைச் சுற்றி கடுமையான யுத்தம் நடைபெற்று வருகிறது. பால்டிக் கடலில் துருப்புகள் இறக்க முயற்சித்த ஜெர்மன் நாசகாரிக் கப்பல்கள் நாசம் செய்யப்பட்டன. லெனின்கிராடைப் பிடிப்பதற்கு ஜெர்மானியர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்கள். ஆனால் லெனின்கிராட் தைரியமாகத் தன்னைப் பாதுகாத்துக்கொண்டு வருகிறது. லெனின்கிராட் நகர மக்கள் தாங்கள் வெற்றி பெறுவதில் நம்பிக்கை கொண்டிருப்பதாக லண்டன் நகர மக்களுக்கு ஒரு ரேடியோ செய்தியினால் அறிவித்தார்கள்.

மத்தியப் பகுதியில், மார்ஷல் தீமோஷெங்கோ என்ற ரஷ்ய தளகர்த்தர் முன்னேறிக் கொண்டு வருகிறார். ஸ்மோலென்ஸ்க் என்ற முக்கியமான இடத்துக்கு 12 மைல் தூரத்தில் வந்திருக்கிறார். ஜெர்மானியர்கள் சீயப் என்ற மற்றொரு முக்கிய பட்டணத்தை நோக்கிச் செல்கிறார்கள். ஒடெஸ்ஸா ஜெர்மானியர்களை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறது.

பல்கேரியா ஜெர்மனியோடு ஒத்துழைப்பதை ஆட்சேபித்து ரஷ்யா பல்கேரிய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை செய்திருக்கிறது.

ஜெர்மனியின் ஆகாய விமானப்படை தொடர்ந்து நடத்திய யுத்தத்தினால் பலங்குறைந்து இருக்கிறது. அநேக விமானங்கள் ரஷ்யர்களால் நாசம் செய்யப்பட்டதால் விமானப் போர்முனையில் பல இடங்களில் ஆகாய விமானங்கள் இல்லாமல் இருக்கின்றன. இந்த நல்ல சமயத்தில் பிரிட்டிஷ் விமானப் படையைச்சேர்ந்த பல விமானங்கள் ரஷ்யப் பாதுகாப்புக்காக போர்முனைக்கு வந்து சேர்ந்திருக்கின்றன.

---

# வாரச் செய்திக் குறிப்புகள்:

### ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப்போர்.

சென்றவாரம், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் ஜெர்மனியின் கடற்கரைப் பட்டணங்களைத்தாக்கின. ஹாம்பர்க், பக்ஷேவன், வில்ஹெம்ஷேவன், ஹனோவர் முதலிய பட்டணங்கள்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

ஹாம்பர்க்கில் உள்ள ரயில்வேக்கள், கப்பல் கட்டும் சாலைகள், தொழிற்சாலைகள் முதலியன முக்கியமாகத் தாக்கப்பட்டன. பல இடங்களில் நெருப்புப் பிடித்துக்கொண்டு எரிந்தது.

இந்தத் தாக்குதல் மிக முக்கியமானது. ஏனென்றால், ஜெர்மனியின் கிழக்கு யுத்தப்போர் முனைக்கும், மேற்கு யுத்தப்போர் முனைக்கும், இந்த கடற்கரைப் பட்டணங்கள் முக்கியமான வேலைசெய்து வருகின்றன. அட்லாண்டிக் கடல் யுத்தத்திற்குத் தலைமை ஸ்தானம் இப்பட்டணங்கள்தான் இங்கிருந்து ஜெர்மன் சப்மரீன்களும், இதர யுத்தக் கப்பல்களும் அட்லாண்டிக் கடலுக்குச் செல்கின்றன. இதல்லாமல் லெனின்கிராடுக்கு அருகில் உள்ள பால்டிக் கடல் பிரதேசத்தில் இருக்கும் ஜெர்மன் தரைப் படை, கடற்படை, விமானப்படை முதலியவைகளுக்கு சகல உதவியும், சாமான் முதலியவைகளும் இங்கிருந்து தான் போகின்றன.

ஜர்மனி ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளின்மேல், பிரிட்டிஷ் விமானங்கள் பறந்து, பல இடங்களில் வெடிகுண்டுகளைப்போட்டன. நார்வேயில் ஹாஜி சுண்டு என்ற துறைமுகப் பட்டணத்தில் உள்ள ஒரு கப்பல் தாக்கப்பட்டது.

இந்திய யுத்த நிதிகளிலிருந்து வாங்கப்பட்ட ஆகாய விமானங்கள் மெச்சத்தகுந்த வேலை செய்து வருகின்றன. இந்தியாவின் வடக்கிலிருக்கும் பஞ்சாப் மாகாண யுத்த நிதியிலிருந்து வாங்கப்பட்ட விமானங்கள், இந்த வருஷம் ஆகஸ்டு மீ 21௳ ஹாலந்தில், இச்முய்தின் என்ற பட்டணத்தைத்தாக்கின. இந்தப்பட்டணம் இரும்பு, ஸ்டீல் தொழிற்சாலைகளுக்குப் பேர்போனது. விமானங்கள் வெகுதூரம் கீழே இறங்கி வெடிகுண்டுகளைப்போட்டன. தொழிற்சாலைக் கட்டடங்கள்மேல் நேராக சில வெடிகுண்டுகள் விழுந்தன. அருகில் இருந்த ஒரு ராணுவச்சாலை யந்திர பீரங்கிகளால் இடைவிடாது சுடப்பட்டது. இந்தக் காரியத்தைச்செய்த விமானங்கள் "பஞ்சாப்" என்ற விமானப்படையைச் சேர்ந்தவை. இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், இந்தப் படையிலிருந்து ஒரு வெடிகுண்டு விமானப்படை எதிரிகளால் சேதப்படுத்தமுடியவில்லை.

பிரிட்டனின் கிழக்குக் கரையோரத்தில், ஒரு ஜெர்மன் வெடிகுண்டு விமானம், பிரிட்டிஷ் போர் விமானங்களால் தாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டது.

### ஒரு மாத சேதம்.

சென்ற ஆகஸ்டுமாதத்தில், பிரிட்டனில் விமானப் போரினால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றிய விவரங்கள் சென்ற வாரத்தில் வெளியிடப்பட்டன. ஜெர்மன் விமானத்தாக்குதல்கள் ராணுவத்தில் சம்பந்தப்படாத சாதாரண மக்கள் மேல் நடத்தப்படுகிறது. அதனால் உண்டாக்கப்பட்ட சேதம் பின்வருமாறு:—

கொல்லப்பட்டவர்கள் அல்லது கொல்லப்பட்டதாக நம்பப்பட்டவர்கள் 169 இந்தக் கணக்கில் சேர்ந்தவர்கள் 56 ஆண்கள், 72 பெண்கள், 28 குழந்தைகள், 13 பேர் விவரம் கண்டுபிடிக்க முடியாதவர்கள்.

காயப்பட்டு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுபவர்கள் 136. இதில் 66 ஆண்கள், 51 பெண்கள், 19 குழந்தைகள்.

சென்ற வருஷம் (1940) ஆகஸ்டு மாதத்தில், விமானத்தாக்குதலால் பிரிட்டனில் கொல்லப்பட்டவர்கள் 1,085; காயப்பட்டவர்கள் 1,265.

### இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக்கடல்.

ஆப்பிரிக்காவில், எகிப்து—லிபியா எல்லைப்பிரதேசத்தை பிரிட்டிஷ் விமானங்கள் சென்றவாரம் பலமாகத்தாக்கின. காம்பட என்ற இடத்தில் எதிரி விமானங்கள் தரையில் ஒன்றுசேர்த்து வைக்கப்பட்டிருந்தன. பிரிட்டிஷ் விமானங்கள் அவைகளைத் தாக்கி, அநேக விமானங்களை சேதப்படுத்தின.

எல்லைப்பிரதேசத்தில் ஒரு இத்தாலிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

திரிபோலி, பெண்காசி, பார்ஸ் என்ற இடங்களின் மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. பெண்காசி துறைமுகத்தில் இருந்த கப்பல்கள்மேல் போட்ட வெடிகுண்டுகள், லட்சியங்களின்மேல் பட்டு வெடித்தது நன்றாகத் தெரிந்தது.

எகிப்திய எல்லையைத்தாண்டி சில மைல்கள் முன்னேறிவந்த இரண்டு எதிரிப்பட்டாளங்கள், தாங்கள் முன்பு இருந்த இடங்களுக்குப் பின்வாங்கிச் சென்றுவிட்டன என்று ஒரு கெய்ரோ (எகிப்தின் தலைநகரம்) செய்தி கூறுகிறது.

### அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்கா, அச்சு நாடுகளை எதிர்த்துப் போர் புரியும் நேச நாடுகளுக்கு யுத்த சாமான்கள் ஏற்றுமதி செய்துகொண்டு வருகிறது. அதன் விவரங்களைப்பற்றி, சென்ற வாரம் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அமெரிக்க சட்டசபைக்கு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார். வாடகை-கடன் திட்டத்தின்கீழ், ஆகஸ்டு 31-ந் தேதியோடு, அனுப்பப்பட்ட யுத்த சாமான்களின் விலை 19 கோடி டாலருக்கு மேலிருக்கிறது என்று குறிப்பிட்டார். 12 நாடுகள் அமெரிக்காவிலிருந்து உதவி பெற்றிருக்கின்றனவென்றும் யுத்த சாமான் உதவி அருவிபோல் ஓடிக்கொண்டிருந்தது ஒரு பெரிய ஆறாக ஓடிக்கொண்டிருக்கிறதென்றும், இந்த ஆறு ஒரு பிரம்மாண்டமான வெள்ளமாக, கூடியசீக்கிரம் மாறி, நாஸிக் கொடுங்கோன்மையை முழுகடித்துவிடும் என்றும் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறினார்.

அட்லாண்டிக் கடலில் உள்ள அமெரிக்கக் கப்பற்படைக்குப் புதிய உத்தரவுகள் கொடுக்கப்பட்டன.

## இந்தியசேனை எரிட்ரீயாவில் முன்னேறுகிறது!



எரிட்ரீயாவின் மலைப்பிரதேசத்திலே, சீக்கியப் படையைச் சேர்ந்த பிரன் துப்பாக்கிப் படையினர் பின்வாங்கி ஓடும் இத்தாலியர்களை துறத்தியடிக்கும் காட்சி.

இதைப்பற்றி, அமெரிக்கக் கடற்படை மந்திரி, கர்னல் பிராங் நாக்ஸ், சென்ற வாரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் தெரிவித்தார். அமெரிக்கா கண்டத்திலிருந்து ஐஸ்லாந்து பிரதேசத்துக்குச் செல்லும் யுத்த சாமான் சப்ளை கப்பல்கள், அமெரிக்க யுத்த கப்பல்களால் பாதுகாக்கப்படும் என்று அவர் அறிவித்தார். இந்தப் பிரதேசத்தில் அகப்படும் அச்சு நாட்டு நீர்மூழ்கிக் கப்பலையும், இதர யுத்த கப்பல்களையும் கைப்பற்றவேண்டும் அல்லது அழிக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது இதுதான் ஹிட்லருக்கு அமெரிக்கா கொடுக்கும் பதில் என்றும் அட்லாண்டிக் யுத்தத்தில் ஜெர்மனி தோல்வியடைந்துகொண்டு வருகிறதென்றும், கர்னல் நாக்ஸ் அறிவித்தார்.

### ரஷ்யாவும், பின்லாந்தும்.

ரஷ்யாவில், ஸ்மொலென்ஸ்க் பிரதேசத்தில் வடகிழக்கில் ஜெர்மானியர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். ஜெர்மானியர்களுக்கு 10,000 பேர் நஷ்டம். 8 நாள் பிரம்மாண்டமான யுத்தம் நடைபெற்றது. யார்ட்சிவோவிலிருந்து ஜெர்மானியர்கள் பின்தள்ளப்பட்டார்கள்.

ஒடெஸ்ஸாவைத் தாக்கின ஜெர்மானியத் துருப்புகளை, ரஷ்யத் துருப்புகள் எதிர்த்துப் போராடிப்பின்னுல் தள்ளிவிட்டன.

கிரைமியா பிரதேசப் பாதுகாப்புகளை உடைத்து ஜெர்மானிய வெடிகுண்டு விமானங்கள் முன்சென்றதாகவும், ட்நீயப்பர் நதிக்கரையின் கீழ்பாகத்தில் ஜெர்மன் துருப்புகள் முன்னேறியதாகவும், ஜெர்மானியர்கள் கூறுகிருர்கள்.

ஓயசெல் என்ற இடத்தில் நடந்த சண்டையில், ஜெர்மானியர்கள் பலமாகத் தோற்கடிக்கப்பட்டார்கள்.

கீய்வ்போர் முனையில், ரஷ்யர்கள் ஜெர்மானியர்களை எதிர்த்துக்கொண்டு, தங்களுடைய பாதுகாப்புகளை பலப்படுத்திக்கொண்டு வருகிருர்கள்.

ரஷ்ய யுத்தத்தில், ஹிட்லர் தோல்வியடைந்துவிட்டதாக நியுஜிலாந்தின் முதல் மந்திரி, மிஸ்டர் பீடர் பிரேசர், ஒரு கூட்டத்தில் பேசியபோது கூறினுர். கீய்வ், லெனின்கிராட், மாஸ்கோ இந்த மூன்று இடங்களிலிருந்தும் ரஷ்யர்கள் பின்வாங்கிச் செல்ல நேர்ந்தாலும், தங்களுடைய ராணுவத் தொடர்ச்சி 'லைனை'ப் பாதுகாத்திருக்கிறவரைக்கும், ஹிட்லருக்குத் தோல்விதான் எனறு அவர் சொன்னுர். இந்த அபிப்பிராயம் பிரிட்டனில் உள்ள பொறுப்பான வட்டாரங்களில் இருக்கின்றது என்று தெரிவித்தார்.

### பால்கன்ஸ், துருக்கி, இரான், முதலியன.

இரானின் அரசர் ராசாஷா, தன்னுடைய ராஜ்யத்தை விட்டுவிட்டு, இரானின் தலைநகரத்திலிருந்து மோட்டார் வண்டி மூலமாக இஸ்பாஹன் என்ற இடத்துக்குப் போய்விட்டார். தன்னுடைய நாட்டு மக்களுக்கு அனுப்பிய அறிக்கையில், தான் மிகவும் பலம் குறைந்து, நாட்டுக் காரியங்களைச் சரிவர கவனிப்பதற்கு முடியாமல் இருப்பதால், அரசர் பதவியை தன்னுடைய மூத்த மகனிடம் ஒப்புவித்துவிட்டதாக அறிவித்தார். அவருடைய அறிக்கை இரானிய சட்டசபையில் முதல் மந்திரியால் படிக்கப்பட்டது.

இரானிய அரசர் ராஜ்யத்தை விட்டு நீங்கிவிட்டார் என்ற செய்தி கேட்டவுடன், பிரிட்டிஷ் துருப்புகளும் ரஷ்யத் துருப்புகளும், இரானின் தலை நகரமாகிய டெஹரானை நோக்கச் சென்று சில பாகங்களை கைப்பற்றிக்கொண்டன. இரானிய அரசாங்கம் துருப்புகள் வருவதை நிறுத்திவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது. அதை மீறி வந்தாலும் கூட அவர்கள் கெட்ட எண்ணத்தைக்கொண்டு வரவில்லையாதலால், இரானியர்கள் ஒன்றும் பயப்படவேண்டியதில்லை என்று இரானிய முதல் மந்திரி, மிஸ்டர் பருகி, சட்டசபையில் அறிவித்தார்.

இரானில் நடந்த சம்பவங்களைப்பற்றிய விவரங்களை இந்த இதழில் வேருெரு கட்டுரையில் காணலாம்.

இரானின் புதிய அரசர் சென்ற புதன்கிழமை (செப்டெம்பர் 17-ல்) சிம்மாசனம் ஏறினுர்.

### கப்பல் நிலைமை.

ஒரு லட்சம் டன் எடையுள்ள எதிரிக் கப்பல்களை, பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்களும், ஆகாய விமானங்களும், இந்த மாதத்தின் (செப்டம்பர்) முதல் பாதியில் முழுகடித்திருக்கின்றன.

சென்ற மாதத்தில் முழுகடிக்கப்பட்ட அச்சு நாட்டுக் கப்பல்களின் எடை 1,68,000 டன்கள்.

ஒரு ஜெர்மன் யுத்தக் கப்பலையும், துருப்புகள் தாங்கிச் செல்லும் ஒரு கப்பலையும், ரஷ்ய மோட்டார் நீர்க்குண்டு படகுகள் தாக்கி, பெட்சாமோவுக்குச் செல்லும் வழியில் முழுகடித்தன.

### தூரக்கிழக்கு அரங்கம்.

மிஸ்டர் சீகோ நாகனோ, ஜப்பானிய டோஹோகை அரசியல் கட்சித் தலைவர், சென்ற வாரம்

டோக்கியோவில் (ஜப்பானின் தலைநகரம்) ஒரு பெருங் கூட்டத்தில் பேசியபோது, கூடிய சீக்கிரம் ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் சண்டை உண்டாகும் என்று கூறினர். அதிக காலம் அமெரிக்காவுடன் சமாதானப் பேச்சுகள் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், ஜப்பான் தெற்கு நோக்கிச் செல்லும் முயற்சியின் தகுந்த சந்தர்ப்பங்களை இழக்கக் கூடாதென்றும், பிரிட்டன், அமெரிக்கா, இவைகளின் சமாதானப் பேச்சுகளில் ஜப்பானிய அரசாங்கம் ஏமாந்துபோகக்கூடாதென்றும் அவர் எச்சரிக்கை செய்தார்.

மிஸ்டர் கார்டல் ஹல், அமெரிக்க அரசியல் மந்திரி, ஜப்பானிய—அமெரிக்க அரசாங்கத் தொடர்புகளில் புதிய விஷயங்கள் ஒன்றும் இல்லை என்றும், பசிபிக் பிரச்சினைகளை சமாதான முறையில் முடிவு செய்வதற்கு முடியுமா என்பதைப்பற்றிப் பேச்சுகள் நடக்கின்றனவென்றும் கூறினர்.

ஜப்பான்—சீன யுத்தத்தில், மத்திய சீனுவில் ஜப்பானியர்கள் வெற்றிபெற்றதாகக் கூறுகிருர்கள். ஹாங்கோ, ஊசங் பிரதேசங்களில் நடந்த சண்டையில், சீனுவின் நான்காவது பட்டாளத்தை முறியடித்ததாகச் சொல்லப்படுகிறது.

### விஷி.

விஷி அரசாங்கத்துக்கும் ஜெர்மனிக்கும் ஒற்றுமை உண்டாக்குவதற்கு முயற்சி செய்வதாக, மிஸ்டர் லவால் ஒரு பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிருர். பிறகு ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும் நட்பு ஏற்படுமாம்!

விஷி அரசாங்கத்துக்கு எதிரிடையாக நடக்கும் கிளர்ச்சிகளை அடக்குவதற்காக, விஷி மந்திரி சபை சில சட்டங்களை அங்கீகாரம் செய்திருக்கிறது. சில இடங்களில் கூட்டங்கூட்டமாக, பிரஞ்சு மக்கள் கைது செய்யப்படுகிருர்கள். ஒரு நகரத்தில் 1,000 பேர் கைது செய்யப்பட்டார்கள். மார்சேல்ஸ் என்ற பட்டணத்தில், இரகசியமாக யுத்த ஆயுதங்களும், வெடிகுண்டு சாமான்களும் வைத்திருந்த இடங்களைப் போலீசார் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படுகிறது.

### ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்.

பிரான்சில் ஜெர்மானியர்களுக்கு விரோதமாக உணர்ச்சி பரவிக்கொண்டு வருகிறது. லைல் என்ற பட்டணத்தில் இரண்டு ஜெர்மன் உத்தியோகஸ்தர்களும், பாரிசுக்கு வெளியில் ஒரு சிறு கிராமத்தில் ஒரு ஜெர்மன் உத்தியோகஸ்தரும், பிரெஞ்சுக்காரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று லண்டன் "டெய்லி டெலிகிராப்" பத்திரிகை சென்ற வாரம் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது.

பிரான்சில் ஜெர்மனிக்கு விரோதமாக பொது மக்களிடம் உணர்ச்சி அதிகரித்துக்கொண்டு வருகிறது, என்று இத்தாலியப் பத்திரிகையாகிய "ரெஷீம் பாசிஸ்டா" ஒப்புக்கொள்ளுகிறது. அப்பத்திரிகை கூறுவதாவது:—எல்லா ஜெர்மன் ஸ்தாபனங்களுக்கும், இத்தாலிய ஸ்தாபனங்களுக்கும், எதிரிடையாக ஒரு இரகசிய இயக்கம் நடந்து வருகிறது. அதன் காரணமாக, பல இடங்களில் தொழிற்சாலைகளில் உள்ள யந்திரங்கள் நாசப்படுத்தப்படுகின்றன. முன் வாரத்தில், பாரிசில் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் இம்மாதிரி 12 நாச வேலைகள் நடந்திருக்கின்றன. அதில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட எல்லோரும் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.

பாரிசுக்கு வெளியில் உள்ள சிறு பட்டணத்தில், ஜெர்மனிக்காக சாமான்கள் தயார் செய்யும் மூன்று தொழிற்சாலைகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டன. இந்த நாச வேலைகளுக்கு இடம் கொடுத்த மூன்று பிரபல தொழிற்சாலை முதலாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள் இந்த இரண்டு விஷயங்களும் ஒரு மாஸ்கோ செய்தியிலிருந்து தெரிய வருகின்றன.

ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில், அரசியல் துறையில் பிரசார யுத்தம் செய்யும் ஸ்தாபனங்கள் ஒற்றுமையுடன் வேலை செய்வதற்காக, சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், பார்லிமெண்டில் அறிவித்தார். முதல் மந்திரி மேலும் கூறியதாவது:—பிரிட்டனுடைய அயல் நாட்டு மந்திரி, சமாச்சார மந்திரி, பொருளாதார யுத்த மந்திரி, ஆக்கிரமித்த நாடுகளில் செய்யும் பிரசார சம்பந்தமாக, கலந்து பேசினர்கள். அரசியல் யுத்தம் நடத்துவதற்காக ஒரு சிறிய கமிட்டி ஏற்படுத்தவேண்டுமென்று அவர்கள் சிபார்சு செய்தார்கள். அந்த சிபார்சின்படி ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அந்த கமிட்டி வேலை செய்ய உடனே ஆரம்பித்துவிட்டது.

### ருமேனியர்கள் கொதிப்பு.

ருமேனியா என்பது தென் கிழக்கு ஐரோப்பாவில் பால்கன் தீபகற்பத்தில் உள்ள ஒரு நாடு. ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட இந்த நாட்டில், துன்பமும் அமைதியின்மையும் அதிகரித்து வருகின்றன. ஜெர்மனிக்கு எதிராகப் புரட்சிசெய்ய வேண்டும் என்ற உணர்ச்சி ருமேனியா முழுவதும் கொதித்துக்கொண்டிருக்கிறது. ருமேனியாவிலிருந்து சிலர் ஸ்விட்ஜர்லாந்துக்குத் தப்பி ஓடி விட்டார்கள். ஜெனரல் ஆண்டனெஸ்கோவின் தலைமையில் நடக்கும் ருமேனிய அரசாங்கத்தை ருமேனிய மக்கள் வெறுக்கிருர்களென்றும், ரஷ்யாவுக்கு எதிராக ஜெர்மனி நடத்தும் யுத்தம் அவர்களுக்கு விருப்பம் இல்லையென்றும், தப்பிவந்த ருமேனியர்கள் கூறுகிருர்கள். அவர்கள் கூறுவதிலிருந்து அறியக் கூடிய விஷயமாவது:—

யுத்தத்தில் ஏற்பட்ட பெருத்த நஷ்டங்கள் பொது மக்களின் மனத்தில் அதைரியத்தையும், கவலையையும் உண்டாக்கிவிட்டன. அதிகமான உணவுப் பொருள் ஏற்றுமதி செய்யும் நாட்டில், இப்போது உணவுப் பொருள் கிடைக்காமல் மக்கள் கஷ்டப்படுகிருர்கள். ஜெர்மன் சிப்பாய்களைக் கொல்வது, காயப்படுத்துவது முதலிய வேலைகள் நடந்துகொண்டு வருகின்றன. "ருமேனியா யுத்தத்துக்கு வெளியில் இருக்கவேண்டும்" என்று துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு நாடு முழுவதும் 'பட்டுவாடா' செய்யப்படுகிறது. தேசீயக் குடியானவர்களின் கட்சித் தலைவர் மனியூ அவர்களும், தேசீய மிதவாதக் கட்சியின் தலைவர் பிரத்தியானு அவர்களும் அத்துண்டுப் பிரசுரத்தில் கையெழுத்திட்டிருக்கிருர்கள். யுத்தத்தில் ருமேனியர்கள் கலக்கக்கூடாது என்ற உணர்ச்சி நாடு முழுவதும் பரப்பப்படுகிறது. இந்த சமயத்தில், யுத்த முனைக்கு அதிக ருமேனியத் துருப்புகள் அனுப்பவேண்டுமென்று ஜெர்மனி வற்புறுத்துகிறது.

### நார்வேயில் வேலை நிறுத்தம்.

நார்வேயில் எல்லா தொழிலாளர்களும் பொது வேலை நிறுத்தம் செய்திருக்கிருர்கள். நார்வேயின் தொழிலாள ஐக்கிய சங்கத்தின் ('டிரேட் யூனியன் காங்கிரஸ்') இரண்டு தலைவர்களான ஹான்ஸ்டீனும், விக்ஸ்ட்டுராயமும், ஜெர்மானியர்களால் முந்திய வாரம் புதன்கிழமை (செப்டெம்பர் ௴ 10௳) கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள். தொழிலாள ஐக்கிய சங்கத்தின் காரியக் கமிட்டியின் இதர அங்கத்தினர்கள் ஜெயிலில் வைக்கப்பட்டார்கள். இதை ஆட்சேபித்து, நார்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிருர்கள். ஜெர்மானியர்களுடைய அதிகார வரம்புகடந்து பல விஷயங்கள் நடக்கின்றன. பட்டாள மோட்டார் 'லாரி'களிலிருந்து 'ப்ளக்' என்ற முக்கியமான விசைகளை இரகசியமாக எடுத்து எறிந்துவிடுகிருர்கள். ரயில் வண்டிகளிலிருந்து முக்கியமான பாகங்கள் கழற்றப்பட்டு அப்புறப்படுத்தப்படுகின்றன. வெடி குண்டு சாலைகள் நெருப்பு வைக்கப்பட்டு நாசமாக்கப்படுகின்றன. காலியாக இருக்கும் ஜெர்மன் ராணுவச்சாலைகள் நெருப்புக்கு இரையாக்கப்படுகின்றன. புரட்சிப் பத்திரிகைகளும் துண்டுப் பிரசுரங்களும், வெளியிடப்பட்டு, நார்வே மக்களின் உணர்ச்சியை அதிகப்படுத்துகின்றன. நார்வேயிலுள்ள ஜெர்மானியத்துருப்புகளால் இவைகளை அடக்கமுடியவில்லை.

நார்வேயின் துரோகியும், ஜெர்மனியின் கையாளுமான மேஜர் குஸ்லிங், ஆஸ்லா துறைமுகத்தில் ஒரு திறப்புவிழா செய்வதற்காக ஏற்பாடு செய்திருந்ததார். அந்த சமயத்தில் துறைமுகத்தின் மேலும், அதற்கு அருகிலுள்ள ஒரு தொழிற்சாலையிலும், பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. வெடி குண்டுகள் சத்தம் கேட்டதும், மேஜர் குஸ்லிங் ஓடி ஒளிந்துகொண்டார். விமானத்

தாக்குதல் முடிந்தபிறகு, திறப்புவிழா ஆரம்பிக்கப்பட்டது. அதில் சம்பந்தப்பட்ட எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். ஆனல் மேஜர் குஸ்லிங் மாத்திரம் வரவில்லை. கூட்டத்தைக்கூட்டியவர்கள் அதிகநேரம் அவருக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர் வரவில்லை, கிராமபோனில் இசைத்தட்டுகள் மூலம் சங்கீதத்தை நடத்தி, கூட்டத்தைத் திருப்தி செய்தார்கள். வெகுநேரம் கழிந்தும், மேஜர் குஸ்லிங் தாம் ஒளிந்த இடத்திலிருந்து வெளியில் வரவில்லை. கடைசியில், அவர் இல்லாமலேயே, திறப்புவிழாக் கொண்டாட்டத்தை நடத்திவிட்டார்கள். அதன்பிறகு அதிகநேரம் கழித்து, மேஜர் குஸ்லிங் தான் ஒளிந்த இடத்திலிருந்து மெதுவாக வந்து சேர்ந்தாராம்! இந்த விவரங்கள் ஸ்டாக்கோமில் (ஸ்வீடன் என்ற நடுநிலைமை நாட்டின் தலைநகரம்) வெளியிடப்பட்டிருக்கின்றன.

### டச்சுப்பெண்ணின் தீரம்.

நேச தேசத்தைச் சேர்ந்த ஒரு ஸ்தானீக உத்தியோகஸ்தரின் ஆங்கில மனைவி, ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் ஜெர்மனிக்கு எதிராக நடக்கும் விஷயங்களைப்பற்றி, சென்றவாரம் கூறினர். அவர் கூறிய விவரங்கள் "டெய்லிமெயில்" என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவை பின்வருமாறு;—

ஹாலந்தில், தொழிற்சாலைகளை அழிக்கும் சங்கங்கள் பல இருக்கின்றன. அதில், ஜெர்மனிக்கு எதிராக உள்ள டச்சு இளைஞர்கள் அநேகர் அங்கத்தினராய் இருக்கிறார்கள். அவர்கள், ஜெர்மனியால் உபயோகப்படுத்தப்படும் எல்லா தொழிற்சாலைகளையும், இதர ஸ்தாபனங்களையும் இரகசியமாக அழிப்பதற்குக் கங்கணங்கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இதில் சம்பந்தப்பட்ட 17-வயதுடைய ஒரு டச்சுப்பெண், யுத்தசாமான் தொழிற்சாலை ஒன்றில் வெடிகுண்டு வைத்து நாசமாக்குவதற்கு உதவிசெய்தாள். இதல்லாமல் ஒரு மின்சாரத்தொழிற்சாலையில் அக்கினிக் குண்டுகள் போட்டு அதை அழிப்பதற்கு உதவிசெய்தாள். இவளும், இன்னொரு பெண்ணும், இரண்டு டச்சுக்காரர்களும், மின்சார சாலையில் அக்கினிக்குண்டுகளை வைத்து நெருப்புப்பற்றி எரியும்படி செய்தார்கள். தொழிற்சாலை ஏறக்குறைய முழுவதும் அழிந்துபோய்விட்டது. இவளுக்கு, பெட்ரோல் சப்ளை செய்யும் வேலை கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வேலை சம்பந்தமாக அவள் போய்க்கொண்டிருக்கும்போது, "கெஸ்டாபோ" என்ற ஜெர்மன் இரகசியப்போலீஸ்காரர்கள் அவளைக்கண்டுபிடித்து விட்டார்கள். உடனே சுவிட்சர்லாந்துக்கு ஓடிப்போய் விடும்படி அவளுடைய நண்பர்கள் கூறினர்கள். கையில் பணம் இல்லாமல், யாதொரு உதவியும் இல்லாமல், ஒரு 'சைகிளி'ல் ஏறிக்கொண்டு, ஹாலந்தைத்தாண்டி ஸ்விட்சர்லாந்தின் தலை நகரமாகிய ஜினீவாவுக்கு வந்துசேர்ந்தாள். சமாதான காலத்தில், 'சைகிள்' மூலமாக ஹாலந்தைக்கடந்து செல்வது ஒரு சாமர்த்தியமான காரியம். யுத்தகாலத்தில் கடந்துசென்றது ஒரு அசாத்தியமான காரியம்.

### பிரெஞ்சு பெண்களுக்குத் தண்டனை.

பிரான்சில் ஒரு பட்டணத்தில் உள்ள பெண்மணிகள் எல்லோரும் ஒரு மாதத்திற்குத் தெருக்களைப் பெருக்கவேண்டுமென்று ஜெர்மானியர்கள் உத்தரவு செய்தார்கள். ரொட்டி விகிதாசாரம் கொடுக்கும் வரிசையில் யாரோ சில பெண்கள் சண்டைபோட்டதற்காக, இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தப்பட்டணத்தின் பெண்கள், தங்களுடைய மிகுந்த அழகான உடைகள், 'ஹாட்'டுகள் (ஐரோப்பியர்கள் தலையில் அணிவது), முதலியவைகளை அணிந்துகொண்டு தெருக்களில் பெருக்க ஆரம்பித்தார்கள். ஜெர்மானியரின் உத்தரவின் பலனைக்கண்டு எல்லோரும் சிரித்தார்கள். உத்தரவிட்ட ஜெர்மானிய தளகர்த்தர் தாம் செய்த காரியத்தின் மடமையை உணர்ந்து, அதை ரத்து செய்துவிட்டார்.

பெல்ஜியத்தில் ஒரு இளைஞனும் அவனுடைய சிநேகிதனும், வீட்டில் செய்யப்பட்ட அக்கினிக்குண்டுகளை, சாமான் வண்டிகள் நிற்கும் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் வைத்துவிட்டார்கள். ஜெர்மானியர்கள் உணவுக்காக இருக்கும் ஆடுமாடுகளின் தீனி 15 வண்டிகள் நிரைய இருந்தது. இந்த வண்டிகள் நெருப்புப்பிடித்துக்கொண்டு நாசமாய்விட்டன. கொஞ்சதூரத்தில் இருந்த தார் எண்ணெய் பிப்பாய்களும் பற்றிக்கொண்டு, ஒரு பெரு நெருப்பாய் கொழுந்துவிட்டு எரிந்து அந்த ரயில்வே ஸ்டேஷன் சாமான் கிடங்கு முழுவதும் அழிந்துபோய்விட்டது. அங்கிருந்த ஜெர்மன் காவலாளர்களிடமிருந்து பெல்ஜிய இளைஞன் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டான். ஆனல் அவனுடைய சிநேகிதன் சுடப்பட்டு இறந்தான்.

ஜெர்மனியின் மற்றொரு அடிமைநாட்டில் இரண்டு விமான ஓட்டிகள் ஜெர்மானியர்களுக்காக ஆகாய விமானங்கள் செய்துவந்தார்கள். அதிப் பொறுமையுடன் ஜெர்மானியர்களுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்து, அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றார்கள். கடைசியில் ஒருநாள் ஆகாய விமானங்களில் ஏறி, அவைகள் சரியாயிருக்கின்றனவா என்று பரீட்சை பார்க்கும்படி அவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. விமான 'டாங்க்' கில் கொஞ்சம் 'பெட்ரோல்' தான் இருக்கும்படி வைப்பது வழக்கம். இரு விமான ஓட்டிகளும் சிறிது சிறிதாக 'பெட்ரோல்' திருடி ஒளித்துவைத்துக்கொண்டு வந்தார்கள். ஒரு நாள் வேண்டிய அளவுக்குப் 'பெட்ரோல்' சேர்ந்ததும், இரண்டுபேரும் விமானங்களைப் பரீட்சை பார்ப்பது போல மேலே பறக்கவைத்து, அப்படியே பறந்து சென்று வேறொரு நாட்டுக்குச் சென்றுவிட்டார்கள்.

### புரட்சி இயக்கம்.

பொதுவாக, ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில், இரகசியப் புரட்சி இயக்கம் அதிகரித்துக்கொண்டுவருகிறது. தொழிற்சாலைகள் நாசமாக்கப்படுவது அதிகரிக்கிறது. சாமர்த்தியமான தந்திரங்கள் கையாளப்படுகின்றன. யந்திரங்களில் "மறதியாக" ஆயுதங்கள் வைக்கப்படுகின்றன. யந்திர வேலை ஆரம்பிக்கும்போது, அவைகள் சிக்கிக்கொண்டு யந்திரங்கள் கெட்டுப்போகின்றன. பெரிய வாள்கள் முக்கியமான மரப் பாகங்களை அறுக்கும்போது, வேலை செய்பவர்கள் மயக்கம் வந்ததுபோல பாசாங்குசெய்து கீழே விழுந்துவிடுவார்கள். நுட்பமாகவும், அளவாகவும் அறுக்கப்படவேண்டிய மரங்கள் நாசமாய்விடும். இம்மாதிரி எல்லாம் செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. ஆனல், நாசத்தொழில் தொடர்ந்து நடந்துகொண்டு வருகிறது.

மேலே குறிப்பிட்ட விபரங்களெல்லாம், முன்பு கூறியபடி, ஒரு நேச தேச ஸ்தானீக உத்தியோகஸ்தரின் ஆங்கில மனைவி, "டெய்லி மெயில்" பத்திரிகைக்குச் சொன்னவைகளாகும். இந்த அம்மையார் சுவிட்சர்லாந்தில் ஒரு வருஷத்துக்கு மேலிருந்தார். விஷி அரசாங்க ஆதிக்கத்தில் இருக்கும் பிரான்சின் வழியாகவும், ஸ்பெயின், போர்ச்சுகல் வழியாகவும், பிரயாணம்செய்து, பிரிட்டனில் சில நாள்களுக்கு முன்தான் வந்துசேர்ந்தார். ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் இரகசியப் புரட்சிச்சங்கங்களைச் சேர்ந்த அநேக இளந் தேசபக்தர்கள் ஜெர்மன் போலீஸ்காரர்கள் கையில் அகப்படாமல் தப்பித்துக்கொள்வதற்கு இந்த அம்மையார் உதவிசெய்வது வழக்கம்.

கிரீசிலும், அல்பேனியாவிலும், ஜெர்மானியர்களையும், இத்தாலியர்களையும் எதிர்த்து அந்நாட்டினர் இங்குமங்கும் சண்டைசெய்து வருவதாகத் தெரிகிறது. சாலோனீகா துறைமுகத்தில் இத்தாலிக்குச் செல்வதற்காகத் தயாராயிருந்த இரண்டு இத்தாலியக் கப்பல்கள் கொளுத்தப்பட்டன. 100 கிரேக்க தொழிலாளர்கள் கைது செய்யபபட்டார்கள். அல்பேனியாவில் ஒரு இத்தாலிய துப்பாக்கிப்படையும், அதனுடைய மலை பீரங்கிகளும் நாசம் செய்யப்பட்டன.

### நடுநிலைமை நாடுகள்.

அர்ஜெண்டைனவில் (தென்னமெரிக்கா) ஹெர் வான் தர்மான் என்ற ஜெர்மன் ஸ்தானீகர் தன்னுடைய கடமைக்கு அதிகமாக சில நடவடிக்கைகள் செய்து வருவதை, அர்ஜெண்டைன சட்டசபை கண்டித்திருக்கிறது.

அர்ஜெண்டைனவுக்கு விரோதமாக அந் நாட்டில் அச்சு சமாச்சார ஸ்தாபனங்கள் பிரசாரம் செய்துவதாகவும், அந்த ஸ்தாபனங்களுக்கு ஏராள

மான பணம் அச்சுநாடுகள் கொடுத்துவருவதாகவும், அர்ஜெண்டைனு சட்ட சபைக் கமிட்டி தன்னுடைய அறிக்கையில் கூறுகிறது.

ஸ்பெயினின் சர்வாதிகாரி ஜெனரல் பிராங்கோ சென்றவாரம் பட்டாளத்தையும், தன்னுடைய கட்சியாகிய பலாஞ்சைச் சேர்ந்தவர்களையும் பார்வையிட்ட போது ஒரு பிரசங்கம் செய்தார். இந்த யுத்தம் வராவிட்டால், ஸ்பெயின் தன்னுடைய கஷ்டங்களிலிருந்து நீங்கி, தலைநிமிர்ந்து எழுந்திருந்திருக்கும் என்று அவர் கூறினர்.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்ருக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.